விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 357 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 25 திங்கட்கிழமை (11.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வற் வரி அதிகரிப்பு நியாயமற்றது

### சஜித் பிரேமதாஸ விசனம்



(கொழும்பு)

வற் வரியை அதிகரிப்பது நியாயமற்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் 15

## தடைப்பட்ட மின்சாரத்தால் சபையில் கடும் தர்க்கம்

(கொழும்பு)

கொத்மலையில் இருந்து பியகம வரையிலான மின் விநியோகப் பாதையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாடு முழுவதும் நேற்று முன்தினம் மாலை முதல் மின் தடை ஏற்பட்டது.

இதனால், நாட்டில் பல வேறு நெருக்கடிகள் ஏற்பட்டதுடன், பொதுமக்களும் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

இந்நிலையில், நேற்றைய பாராளுமன்ற அமர்வில் இந்த விடயம் தொடர்பில் ஆளும், எதிர்க்கட்சிகளிடையே கடும் தர்க்கம் ஏற்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடளாவிய ரீதியில் 15

## ஐ.எம்.எப்பின் 2ஆம் கட்ட கடன் கிடைத்தால்

# இலங்கை வங்குரோத்தற்ற நாடு என அறிவிக்கப்படும்

### நிதி இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் விரிவான கடன் வசதியின் இரண்டாம் கட்டம் தொடர்பில் நாளை தீர்மானம் எட்டப்படும்

குறித்த 2ஆம் கட்ட கடன் கிடைக்குமாயின் வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்ட நாடாக இலங்கையைப் பிரகடனப்படுத்த முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)



## ஜனவரியில் அஸ்வெசும 2ஆம் கட்டம்

(கொழும்பு)

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்காக எதிர்வரும் ஜனவரி மாதம் விண்ணப்பங்கள் கோரப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்டத்தை ஆரம்பிப் 02

## வவுனியாவில் விபத்து; இருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா வேப்பங்குளத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனு 16



## ஜனாதிபதித் தேர்தலை நடத்த அஞ்சுகிறார் ரணில்


### சிறீதரன் எம்.பி விளாசல்

(வவுனியா)

தேர்தல் நடக்கும் என்று சொல்வது ஜனாதிபதிக்கு ஒரு வருத்தமாக இருக்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் பொதுக் குழு உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடியதன் 15

## இந்திய உயர்ஸ்தானிகர் பிரதமருடன் சந்திப்பு



15

## பருத்தித்துறையில் கைதான 25 மீனவர்களுக்கும் மறியல்

(பருத்தித்துறை)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து, கடற்றொழிலில் ஈடுபட்ட 25 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின்போதே நேற்று அதிகாலை 25 தமிழக மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் அவர்களின் இரண்டு படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

## திருமலையில் எனது ஆதரவாளர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளனர்

### விசாரணை நடத்தக் கோருகிறார் சம்பந்தன்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தின் மூலக்கிளைகள் தெரிவின்போது எனக்கு ஆதரவாக உள்ள கட்சியின் நீண்டகால அங்கத்தவர்கள் இலக்கு வைக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன், அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி ஒழுக்காற்று குழுவிடத்தில் எழுத்துமூலமாக 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனவரியில்...

பதற்கு முன்னர் முதல் கட்டம் பற்றிய விரிவான மீளாய்வை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

முதற்கட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் குறித்தும் கவனத்தில் கொள்ளப்படும் என தெரிவித்த இராஜாங்க அமைச்சர், பயனாளிகளின் எண்ணிக்கையை 20 இலட்சமாக உயர்த்தி பொருத்தமானவர்களை தெரிவு செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும், அதற்காக 2024 ஆம் ஆண்டிற்கு 205 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (ந-7)

## 31ஆம் நாள் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 05 - 03 - 1962



மறைவு 14 - 11 - 2023

### அமரர் கணபதிப்பிள்ளை விஜயகுமார்


கருநாட்டுக்கேணி கொக்குத்தொடுவாயைப் பிறப்பிடமாகவும் உடையார்கட்டு வடக்கு, புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் குடும்ப விளக்கு அமரர் **கணபதிப்பிள்ளை விஜயகுமார்** அவர்களது சிவபதப்பேறு 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை 12.12.2023 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 14.12.2023 வியாழக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளமையால் இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உடையார்கட்டு வடக்கு,
உடையார்கட்டு.

இங்ஙனம் : குடும்பத்தினர்
076 882 5729

(18169)

## மரண அறிவித்தல்



### இராமநாதன் தருமலிங்கம்
(ஓய்வுநிலை தபால் அலுவலர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்குளம் கொல்லவிளாங்குளத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான இராமநாதன் தருமலிங்கம் அவர்கள் 09.12.2023 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் ஓய்வுநிலை ஆசிரியை கமலாவதியின் அன்புக் கணவரும் சுவர்ணாவின் அன்புத் தந்தையும் தனுசியனின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற யோகம்மா, காலஞ்சென்ற C.T.P நடத்துனர் பேரம்பலம், யோகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தில்லையம்பலம், நாகேஸ்வரி, காலஞ்சென்ற ஆசிரியர் சோமசுந்தரம், புண்ணியமூர்த்தி, காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் பேரம்பலம், ஜானகி, புனிதவதி, அமிர்தலிங்கம், இராமமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பேரம்பலம், காலஞ்சென்ற பிள்ளையம்மா, கனகசபை, கமலாவதி, யசோதா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வவுனிக்குளம் இந்து மயானத்திற்கு தகனம் செய்வதற்காக காலை 10.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(18187)



# NORTH LANKA IIT CITY CAMPUS

## மாபெரும் புலமைப்பரிசில் - 2024
ரூ. 15,000/= இலிருந்து ரூ. 50,000/=
வரை அள்ளிச் செல்லுங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
இறுதித் திகதி : 14.01.2024

U.G.C. அங்கீகாரம்
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அங்கீகாரம்
கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அங்கீகாரம்
IAU வின் அங்கீகாரம்
UNESCO அங்கீகாரம்
WHED யின் அங்கீகாரம்
இலங்கை கல்வி அமைச்சின் அங்கீகாரம்

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**British Qualfication Certificate course - duration - 1 year**
- Computer Science
- Agriculture Science
- English Language (IELTS)
- Business Management
- Political Science
- Physical Education & sports



**Diploma - 1-2 years**
- Computer Science
- Agriculture Science
- English Language (IELTS)
- Political Science
- Physical Education & sports
- Business Management

**Advance Diploma - 1-2 years**
- Computer Science
- Agriculture Science
- Physical Education & sports (for sports coachers)
- English Language
- Political Science
- Business Management

(C-7866)

**Degree programmes (Top -up) - 1 year**
- Computer Science
- Agriculture Sciences
- B.Ed.
- Business Management (BBA)
- BA in English
- BA in Political Science
- Physical Education & sports



**Master Degree - 1 year**
- MSc in Computer Science
- MSc in Agriculture Science
- M.Ed,
- MBA
- MA in English
- MA in Political Science

M.Sc in Physical Education & sports

IELTS - Courses

Doctor of Philosophy (PhD) (Education, philosophy,

Jaffna - 076 750 4535/ 077 884 9677
Vavuniya - 076 750 4535/ 077 884 9677
Bandarawalla - 076 750 4535/ 077 884 9677
Batticalo - 076 750 4535/ 077 884 9677
Trincomalle - 076 750 4535/ 077 884 9677
Hatton - 077 169 7722/ 077 802 9999

North Lanka IIT Top Floor,
Peples's Bank Building,
Stanley Road, Jaffna
T.P:076 750 4535/
077 884 9677

Lanka City Campus
Batticaloa.
T.P:076 750 4535


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம்

(கண்டாவளை)

**கிளிநொச்சியில் சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.**










காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் இறுதி யுத்தம் நிறைவடைந்த பின்னர் உறவினர்களால் கையளிக்கப்பட்ட தங்களது உறவுகளுக்கு நீதி கோரி கடந்த இரண்டாயிரத்து 485 நாட்களுக்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் உறவுகள் கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள அவர்களது அலுவலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். அத்துடன் முல்லைத்தீவிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-316-315-299-100)

## சர்வதேச பிரகடனத்தை ஏற்கும் தருணத்தில் இலங்கை உள்ளது

### மனித உரிமைகள் ஆணையகத்தின் தலைவர்

(கொழும்பு)

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் அனைத்து மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது என்று மனித உரிமை ஆணையகத்தின் தலைவர் முன்னாள் நீதியரசர் எல்.டி.பி தெஹிதெனிய தெரிவித்தார்.

உலகளாவிய மனித உரிமைகள் தினம் நினைவுகூரப்படும் இத்தருணத்தில், மனித உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உரிமைகள் மற்றும் அவற்றின் விழுமியங்களை முழுமையாக உணர வேண்டியது அவசியம் என்றும் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளின் அடிப்படையில் அநீதிக்கு ஆளான சமூகத்தை பாதுகாப்பதன் மூலம் ஒவ்வொருவரும் வாழ்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதே எதிர்கால நோக்கம் என்றும் மனித உரிமைகள் ஆணையகத்தின் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

அந்தச் செயற்பாட்டில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் சமூக அமைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நாடு மற்றும் சர்வதேச அளவில் மனித உரிமைக் கடமைகளைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் ஆணையகத்தின் தலைவர் முன்னாள் நீதியரசர் எல்.டி.பி.தெஹிதெனிய கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

## இரு வாரங்களில் மரக்கறி விலை குறையும்

(கொழும்பு)

மரக்கறிகளின் விலை எதிர்வரும் 25 ஆம் திகதிக்குப் பின் நிச்சயம் குறையும் என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரும் நிபுணத்துவ விவசாய பொருளாதார ஆய்வாளருமான துமிந்த பிரியதர்சன தெரிவித்துள்ளார்.

சமகாலத்தில் வழக்கத்திற்கு மாறாக பெய்து வரும் கனமழை காரணமாக விவசாய பயிர்கள் பெருமளவில் நாசமடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை மலையகம், தாழ் நிலம் என இரு பகுதிகளிலும் சமமாக மழை பெய்துள்ளது. நாடு முழுவதும் ஒரே நேரத்தில் இது போன்ற மழை இதற்கு முன் பெய்யவில்லை.

முழு நாட்டினதும் விவசாய அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாலேயே மரக்கறிகளின் விலை இந்தளவுக்கு உயர்ந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மரக்கறிகளின் விலை உயரும் போது பருப்பு, தானியங்கள், உருளைக்கிழங்கு போன்றவற்றுக்குப் பதிலாக மாற்றுப் பொருட்களைக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

ஆனால் அரசாங்கம் பல விதமான வரிகளை விதித்த தன் காரணமாக மரக்கறிகளின் விலை அதிகரிப்பு பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

## கோழி இறைச்சி விலையை குறைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)



கோழி இறைச்சியின் விலையை குறைக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒரு கிலோ கிராம் எடையுடைய கோழி இறைச்சியை 800 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், கோழி இறைச்சியின் விலை மேலும் மேலும் உயர்த்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## சபை நடவடிக்கைகள் திடீரென ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் உரிய கோரம் இன்மையினால் நேற்றைய நாளுக்கான சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இன்று காலை 9 .30 மணி வரை சபை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்படுவதாக பிரதி சபாநாயகர் அஜித் அறிவித்தார்.

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் மற்றும் நிதிச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்று வந்த நிலையில் பாராளுமன்றத்தில் உரிய கோரம் இன்மையின்றி சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டம் சம்பியன் வென்றது மகாஜன கல்லூரி



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் மகாஜனா அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்ட போட்டிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணிமோதியது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை மகாஜன கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

(நி-5,90,105)

## இலங்கை...

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த இராஜாங்க அமைச்சர்,

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டம் நாளை (12) இடம்பெறவுள்ளது.

முன்னதாக இலங்கை தனது இரண்டாம் தவணைக் கடனைப் பெற்றுக் கொள்ள கடன் மறுசீரமைப்பு பாரிய தடையாகக் காணப்பட்டது.

தற்போது இலங்கை உள்நாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் வெற்றி கண்டுள்ளது.

மேலும் ஐ.எம்.எப்பின் நிபந்தனைகளில் பெரும்பாலானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எனவே இம்முறை இரண்டாம் கட்ட கடனைப் பெறுவதில் பாரிய சிக்கல்கள் ஏதும் இருக்க மாட்டாது.

இரண்டாம் தவணைக் கடன் கிடைக்கப் பெறுமாயின், இலங்கையினை பொருளாதார வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்ட நாடாக அறிவிக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான 2ஆம் கட்ட கடன் வழங்கல் தொடர்பிலான பிரேரணை ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் இலங்கைக்கு சுமார் 330 மில்லியன் டொலர்கள் கிடைக்கப்பெறும் என்பது குறிப் பிடத்தக்கது.

(ந-7)

## மரண அறிவித்தல்



### வினாசித்தம்பி அன்னம்மா

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி அன்னம்மா 09.12.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னன் - கதிரி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வினாசித்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வாரி - இளையாள் தம்பதியினரின் அன்பு மருமகளும் குஞ்சுப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லையா, சின்னப்பிள்ளை, சின்னத்தம்பி, முத்துப்பிள்ளை(சரசு), அமரர் வள்ளிப்பிள்ளை, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இலட்சுமி மற்றும் மார்க்கண்டு, காலஞ்சென்ற பூரணம் மற்றும் கமலம், செல்லக்கண்டு, கண்மணி, பொன்னம்மா, பசுபதி(கிளி), உதயகுமார், அசோகர் ஆகியோரின் மைத்துனியும் பாஸ்கர், வனிதா, அமுதா, சிறீதர், ஜியிதா(பவுண்) ஆகியோரின் அன்புத் தாயும் பைங்கிளி, துரைசிங்கம், காலஞ்சென்ற யோண்சன், ஞானசீலி, நிஷாகரன்(நிர்வாக உத்தியோகத்தர் வடமாகாண விளையாட்டுத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் இலக்கியா, கீர்த்தனா, செந்தாளன், அகீசன், பாவலன், பைங்கவி, செனன் குளோட், கதிரினா, உமையாள், இளையாள், யாழவன், சங்கீரணி, தரங்கினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அயனின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று திங்கட்கிழமை 11.12.2023 இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு பி.ப 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

'அன்னகம்',
கைதடி மேற்கு,
கைதடி.

(18188)

தகவல்:
குடும்பத்தினர்


## பராமரிப்பாளர் தேவை

வயோதிபப் பெண்மணி ஒருவரை
பராமரிப்பதற்கு ஆரோக்கியமான
பெண் பணியாளர் தேவை.
ஆதரவற்றவர்களுக்கு முன்னுரிமை
தங்கி நின்றும் பணி செய்யலாம்.
சம்பளம் மற்றும் விபரங்களுடன்
நேரடியாக தொடர்பு கொள்ளவும்
செய்யக்கூடிய வேலை மற்றும் கேட்கும்
சம்பளம் போன்றவற்றின் அடிப்படையில்
தேர்வு செய்யப்படும்
தரகர்கள் தேவையில்லை
இடம்: நெல்லியடி , வடமராட்சி

(C-7867)

075 484 71 71

## பணியாளர் தேவை

நெல்லியடியிலுள்ள தனியார்
நிறுவனத்தின் பிரிவொன்றில்
பணி செய்ய A/L படித்த
பெண் பணியாளர் தேவை
பணியிடத்திற்கு சுயமாக வந்து
செல்லும் வசதி உடையராக
இருத்தல் விரும்பப்படும்
பணிகள் தொடர்பாக பயிற்சி தரப்படும்
விபரங்களை பெற்றுக் கொள்ள
தொடர்பு கொள்ளலாம்

(C-7868)

இயக்குநர் : 077 914 3171


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் திட்டமிடல் கிளையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி குமுதா சுபேந்திரன் அவர்களின் பாசமிகு தந்தையார்

### அமரர் ஆறுமுகம் இரவீந்திரநாதன்

(ஓய்வுநிலை ஆசிரியர் - யா/ஹாட்லிக் கல்லூரி)



அவர்கள் 10.12.2023 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயருடன் : பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-7865)

தோற்றம் : 18.04.1947
மறைவு : 10.12.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலுள்ள மனித உரிமைகள் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

கொழும்பிலுள்ள மனித உரிமைகள் அலுவலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று சிவில் அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியிலும் மற்றும் உள்நாட்டிலும் நடக்கும் இனவாத செயற்பாடுகளுக்கு எதிராகவும் மனித உரிமையை வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. (நி-5)



வடக்கு இளைஞர் முன்னெடுப்பு அமைப்பினால் 2023 ஆம் ஆண்டிற்கான இளைஞர் மாநாடு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

(படம்:-சதீஸ்)


# மரண அறிவித்தல்

## திரு. ஆறுமுகம் நாகராசா



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1942.01.05 | 2023.12.09 |

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், அல்வாய் கவிஞர் செல்லையா வீதி, தேவி பிரஸ்தத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஆறுமுகம் நாகராசா அவர்கள் நேற்று முன்தினம் (09.12. 2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மற்றும் செல்வமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும், ரகு (திரு வீடியோ விஷன்), ரவிமாலா (டென்மார்க்), தெய்வேந்திர மாலா (சுவிஸ்), ரவீந்திரன் (பிரதி அதிபர், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்), சித்திரகலா (ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி கல்வி வலயம்), கஜேந்திரன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌசலாதேவி (ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி), குலதெய்வம் (டென்மார்க்), இரத்தினராஜன் (சுவிஸ்), ராதா (ஆசிரியர், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), வித்தியாபதி (நிர்வாக கிராம அலுவலகர், பிரதேச செயலகம், கரவெட்டி), மஞ்சுளா (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபீட்சணன், நிரூசனன், துஷானி, அபினா, சாருஜா, நிஷாதனன், நிரூஷா, திவ்யாஞ்சன், ஸ்வப்ரதாரா, ஹர்ஷப்ரதா, தக்ஷிகா, ஹர்சன், விஸ்ணுகீதன், அஸ்மிதா, கௌசிகன், லதீனா ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர்களான சின்னாச்சி, சின்னத்தங்கம், நாகேஸ்வரி மற்றும் நகுலேஸ்வரியின் அன்புச் சகோதரனும், தங்கராசா, குணசிங்கம், லீலாவதி, இராசம்மா, அமரர் இராசமணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், அமரர்.சபாரட்ணம் மற்றும் வீரபத்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-7861)

தகவல்
நா.ரகு (மகன் 0778577306),
நா.ரவீந்திரன் (மகன் 0777239690),
சித்திரகலா வித்தியாபதி (மகள் 077 539 2992).

அல்வாய்,
கவிஞர் செல்லையா வீதி.



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இம்மைக்கு 1934 . 04 . 22

அம்மைக்கு 2022 . 11 . 22

அமரர்.

## விநாயகமூர்த்தி கனகம்மா

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்ப விளக்கே!
இன்றும் உங்கள் வழிகாட்டலே
இவ்வுலகில் எம்மை வாழ வைக்கின்றது.
விண்ணிலிருந்து எமக்கு வழிகாட்டுவீர்கள் என்ற
நம்பிக்கையுடன் நாம். என்றும் உங்கள்
நினைவுகளுடன் நான்.

(c-7862)

சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

பேரப்பிள்ளை.


# இராசிபலன்

11.12.2023
கார்த்திகை 25, திங்கட்கிழமை
திரயோதசி காலை 6.36 மணிவரை

விசாகம் பிற்பகல் 12.08 மணிவரை
சுபநேரம் -12.19-1.49 மணிவரை
இராகுகாலம்-7.49-9.19 மணிவரை

சந்திராஷ்டமம்-
அச்சுவினி, பரணி.

வளவன்

**மேஷம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**ரிஷபம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், எதிர்கால நலனல் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், தாயின் உடல் நலன் சீராகும், வாகன சுகமுண்டு, வசதி வாய்ப்புக்களைப்பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**கன்னி:** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும்.

**துலாம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்:** விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வழிபாடு குதூகலம் தரும், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு:** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், திட்டமிட்ட காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**மகரம்:** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் கூடும் நாள்.


**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**மீனம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.

உன் இருதயத்தை ஒருபோதும் செல்வத்தின் மீது சாய்ந்திருக்க விடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்கரை பிரதேச சுவீகரிப்பை எதிர்த்து பொன்னாலையில் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

அராலி தொடக்கம் பொன்னாலை வரையான கடற்கரையோரப் பிரதேசத்தையும் பொன்னாலை துருத்திப்பிட்டியையும் சுவீகரிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் எடுத்துள்ள முயற்சியை கைவிட வலியுறுத்தி போரட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கடற்றொழிலாளர்களும் பொதுமக்களும் இணைந்து பொன்னாலை சந்தியில் நேற்றுக் காலை இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.


இதன் போது எமது கடல் எமக்கு வேண்டும். எமது நிலம் எமக்கு வேண்டும். கடலைச் சுவீகரித்து கடற்றொழிலாளர்களை பட்டினிச்சாவிற்குள் தள்ளாதே.எமது கடலை சுவீகரிக்க எவருக்கும் அனுமதியில்லை. ரணில் அரசே எமது கடலலைச் சுவீகரித்து வரலாற்று தவறைச் செய்யாதே. மேச்சல் தரையையும் மயாணங்களையும் மாட்டு வண்டி சவாரித் திடல்களையும் சுவீகரிக்கும் திட்டத்தை உடனே கைவிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில்ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் பொன்னாலை தொடக்கம் அராலி வரையுள்ள கடற்றொழிலாளர்கள், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-33)



சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினால் மனித உரிமைகள் தினத்தினை முன்னிட்டு நேற்று சித்திரவதையிலிருந்து பாதுகாப்பதற்கான தெருவெளி நாடக விழிப்புணர்வு நிகழ்வு பலாலி ஆரோக்கியமாதா ஆலயம் மற்றும் வளலாய் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன. (படம்:-சுபேசன்)

# குடிமனைக்குள் நுழைந்த முதலை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி-நுணாவில் வயல்கரைப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை குடிமனைகளுக்குள் நுழைந்த நிலையில் முதலை ஒன்று பொதுமக்களால் பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அகப்பட்ட முதலையை பொலிஸார் ஊடாக வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை கிராம மக்கள் முன்னெடுத்தனர்.(நி-5-30)

## அஸ்வெசும நலன்புரித்திட்டம்

# 2 ஆம் கட்டத்திற்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டடத்துக்காக எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் விண்ணப்பம் கோரப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்போது அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் முதலாவது கட்டத்தை முன்னெடுக்கும்போது ஏற்பட்ட பிரச்சிச்னைகள் மற்றும் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளும் கவனத்தில் கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 14 இலட்சத்துத் 69 ஆயிரத்துத் 32 பயனாளிகளுக்கான ஒக்டோபர் மாதத்துக்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார் (நி-5)

# எமக்கான நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவோம்

## முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

(வவுனியா)

எமக்கான நீதிகள் கிடைக்க பெறும் வரை சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை துக்க தினமாகவே அனுஷ்டிப்போம் என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி தெரிவித்தார்.

நேற்று மனித உரிமைகள் தினத்தில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இன்றையதினம் மனித உரிமைகள் தினம் என்பதனை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள போவதில்லை. தொடர்ச்சியாக எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அடக்கு முறைகளுக்குள்ளே இருக்கின்றோம். நீதிக்காக போராடுகின்றோம். நீதிக்கான பதில் கிடைக்கவில்லை.

சர்வதேச மனித உரிமைகள் தினம் என்பது அனைவருக்கும் மனித நேயம் கிடைக்க வேண்டும் என்பதே. இலங்கையில் அடக்குமுறைகள் செய்யப்பட்டு கொண்டு அதனை தாங்கள் மனித உரிமைகள் தினம் என கொண்டாடிக் கொண்டு இருப்பது போலித்தனமான நாடகம்.

எங்களுக்கான நீதிகள் எப்போது கிடைக்க பெறுமோ அப்போது தான் நாங்கள் மனித உரிமைகள் தினம் என தலை நிமிர்ந்து நிற்போம். அதுவரை நாங்கள் சர்வதேச மனித உரிமைகள் தினத்தினை துக்க தினமாகவே அனுஷ்டிப்போம்.

உக்ரைனில் போர் நடைபெறுகின்றது. அதனை பார்த்து கண்ணீர் விடுகின்ற நிலையிலே ஐக்கிய நாடுகள் இருக்கின்றது. இலங்கையில் தமிழர்களை கொலை செய்து கிடங்கில் போடும் வரை ஐக்கிய நாடுகள் பார்த்து கொண்டிருந்தார்கள். அந்த நேரம் தான் விட்டிருந்தாலும் தற்போது உறவுகள் நீதி கேட்டு நிற்கும் போது ஏன் தயங்குகின்றார்கள் என்பது எமக்கு கேள்விக்குறியாக உள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியை பெற்றுத்தரும்வரை நாம் எமது உரிமைக்காக போராடுவோம் என மேலும் தெரிவித்தார். (நி-5-299)

# புலம்பெயர்ந்த மக்களால் கிடைத்துள்ள பெருந்தொகை டொலர்கள்

(கொழும்பு)

இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் இந்த ஆண்டின் முதல் 11 மாதங்களில் 5.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை அனுப்பியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

குறிப்பாக நவம்பர் மாதத்தில் மாத்திரம் 537.3 மில்லியன் டொலர்களை அனுப்பியுள்ளதாகவும் இது கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அனுப்பிய தொகையை விட 40 சதவீதம் அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் தொழிலாளர்கள் 3.3 பில்லியன் டொலர்களை மாத்திரமே அனுப்பியுள்ளதாகவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பணம் இலங்கைக்கான வெளிநாட்டு வருமானத்தின் முக்கிய வகிபாகம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 450 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 1200 | 1300 | 1000 | 1100 |
| தக்காளி | 700 | 700 | 800 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 140 | 150 |
| கோவா | 400 | 380 | 400 | 500 |
| கரட் | 350 | 450 | 400 | 500 |
| பூசணி | 150 | 120 | 120 | 120 |
| புடோல் | 300 | 300 | 240 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 350 | 220 | 300 | 350 |
| பாகற்காய் | 600 | 500 | 600 | 200 |
| வெண்டக்காய் | 320 | 280 | 240 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 350 | 450 | 450 | 400 |
| லீக்ஸ் | 400 | 350 | 400 | 400 |
| பீற்றூட் | 250 | 600 | 500 | 600 |
| கறிமிளகாய் | 600 | 700 | 800 | 600 |
| முருங்கைக்காய் | 1200 | 1500 | 1200 | 2000 |
| போஞ்சி | 400 | 550 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 400 | 500 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 200 | 200 |
| தேசிக்காய் | 800 | 700 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 600 | 400 |
| வெங்காயப்பூ | - | — | — | — |
| முள்ளங்கி | 150 | 200 | 300 | 320 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 150 | 80 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பிரதேசசபையின் கீழ் காணிகளை கொள்வனவு செய்பவர்கள், விற்பனை செய்பவர்களுக்கான
# பகிரங்க அறிவித்தல்


சாவகச்சேரி பிரதேசசபையின் அதிகார எல்லைக்குப்பட்ட பகுதிகளில் உரிய அனுமதிகள் இன்றி நகர அபிவிருத்தி அதிகார சபையின் அளவுத்திட்டங்கள் மற்றும் பிற நியமனங்களை பின்பற்றாது காணிகள் பிரிவிடல் செய்யப்பட்டு துண்டங்களாக்கி சட்டவிரோதமாக விற்பனை செய்யப்படுவதனையும், இக்காணிகள் எதுவித அடிப்படை ஆவணங்களை பரிசிலிக்காது கொள்வனவு செய்யப்படுவதனையும் அவதானிக்க கூடியதாகவுள்ளது.

காணிகள் பிரிவிடல் செய்யும் போது 2235/54 ஆம் இலக்க 2021.07.08 ஆம் திகதிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் **"பொருத்தமான அதிகாரசபையிடமிருந்து அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் எந்தவொரு தனிநபரும் காணி உபபிரிவிடுகை அல்லது ஒருங்கிணைத்தல் தொடர்பான எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது"** என்பதனை அனைவருக்கும் பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.

- எம்மால் வழங்கப்பட்ட அமைவுச் சான்றிதழ் இன்றி குறித்த காணியினை விற்பனைக்காக விளம்பரப்படுத்தல், அடையாளப்படுத்தி விற்பனைக்கு ஊக்குவித்தல், பத்திரிக்கைகளில் காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடமுடியாது.
- உரிய வகையில் உப பிரிவிடல் செய்யப்படாத காணித் துண்டங்களை கொள்வனவு செய்தவர் அக் காணிக்கான ஆதனப் பெயர் மாற்றம் செய்ய முடியாது என்பதுடன் அக்காணிகளில் தங்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்தி வேலைக்கும் (மதில், வீடு, கடைகள், கிணறு, மலசல கூடம் இன்னபிற கட்டுமாணங்களை மேற்கொள்ளல், கொங்கிறிட் இட்டு வேலியமைத்தல் போன்ற இவற்றையொத்த அபிவிருத்திகள்) எம்மால் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதுடன் எமது அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் சகல கட்டுமானங்களும் சட்டவிரோதமான செயற்பாடாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- காணி துண்டங்களை கொள்வனவு செய்ய விரும்புவோர் உப பிரிவிடல் உட்பட அக்காணிக்கான பிற அனைத்து ஆவணங்களை உரியவகையில் சான்றுறுதிப்படுத்திய பின்னர் கொள்வனவு செய்யுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

**திரு.க.சந்திரகுமார்,**
**செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை** (சி-7850) **2023.12.11**


# மீண்டும் அதிகரிக்கப்போகும் எரிபொருள் விலை



(கொழும்பு)

அடுத்த வருடம் டீசல் மற்றும் பெட்ரோலுக்கு வரி விதிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் வற் திருத்தச்சட்ட மூலத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருந்துகள், ஊனமுற்றோர் உபகரணங்கள், அரிசி, கோதுமைமா, மரக்கறிகள், பழங்கள், பால் மற்றும் அம்புலன்ஸ் சேவைகளுக்கு வற் வரி அறவிடப்படாது.

தொண்ணூற்று ஏழு பொருட்களுக்கு புதிய வற் வரி விதிப்பதன் மூலம் நாட்டின் பணவீக்கம் இரண்டு சதவீதம் அதிகரிக்கலாம் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5)


## யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
# பாராட்டி வாழ்த்துகிறோம்

**எமது கல்லூரியில் ஆசிரியர் சேவையில் இருந்து இலங்கை அதிபர் சேவை தரம் III இல் பதவியுயர்வு பெற்றோர்.**



திரு. தி.செந்தில்குமரன் (NDT.Science,BED, SLPS III)



திருமதி கா.செந்தில்குமரன் (NDT.Maths,BED, SLPS III)



திரு சு.ஜஜீவான் (NDT.Science,BED, SLPS III)


திரு. கி.சுதாகரன் ( NDT Science,BA,PGDE SLPS III)

**எமது கல்லூரியில் சேவையாற்றிய காலத்தில் இலங்கை அதிபர் சேவைக்கு விண்ணப்பித்து தற்போது இலங்கை அதிபர் சேவை தரம் III இல் பதவியுயர்வு பெற்றோர்.**


திரு. சி.சிவறதீஸ் (NDT.Primary, BED, SLPS III)


திரு. து. அயூரன் (NDT. Drama, BA,PGDE, MED,Dip.in Hons SLPS III)


திரு. ச. கோகுலகாந் (NDT. Maths,BED) SLPS III)


**இவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் III இல் பதவியுயர்வு பெற்றுள்ளதையிட்டு அவர்களை மனதாரப் பாராட்டுவதுடன் அவர்தம் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.**

(சி-7858)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ மகாஜனக்கல்லூரி
தெல்லிப்பழை


# பதுளையில் பாரிய மண்சரிவு

- ஆறு வீடுகள் மாயம்
- மயிரிழையில் உயிர்தப்பிய 97 பேர்



(பதுளை)

ப்துளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொஸ்லந்த கலிபானவெல பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

கலிபனாவல அஸ்வெத்தும மலையின் பாரிய பகுதி சரிந்து வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், பொது மக்கள் வெளியேற்றப்பட்டதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும்,

இருபத்தைந்து குடும்பங்களைச் சேர்ந்த 97 பேரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 6 வீடுகள் காணாமல் போயுள்ளதாகவும், இடிபாடுகள் மேலும் கீழுமாக நகர்ந்து ஏனைய வீடுகள் மூழ்கியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (நி-5)




**கொழும்பு தமிழ் சங்கம், சங்கரப்பிள்ளை மண்டபத்தில் காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வின் போது காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் அவர்களுக்கு கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் சிறுவர் இலக்கியம் எனும் தலைப்பில் உரை நிகழ்த்திய இராசேந்திரன் அவர்களும் அருகில் காணப்படுகிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சூரியனைப் படம் பிடித்த ஆதித்யா எல்-1 விண்கலம்



(டில்லி)

ஆதித்யா எலி-1 விண்கலம் எடுத்த சூரியனின் புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்காக ஆதித்யா எல்-1 எனும் நவீன விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது.

இந்த விண்கலம் பி.எஸ் எல்.வி சி-57 ஏவுகணை மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த செப்டெம்பர் 2ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்டது.

இது பல்வேறுகட்ட பயணங்களைக் கடந்து சூரியனின் எல்-1 பகுதியை நோக்கி சீரான வேகத்தில் பயணித்து, வருகிறது.

அண்மையில் ஆதித்யா விண்கலத்தின் 2 ஆவது ஆய்வுக் கருவி செயற்பாட்டுக்கு வந்தது. இந்த நிலையில் ஆதித்யா விண்கலம் எடுத்த சூரியனின் புகைப்படங்களை இஸ்ரோ கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ளது.

ஆதித்யா விண்கலத்தில் உள்ள புறஊதா கதிர் மூலம் இயங்கும் தொலைநோக்கி இந்த புகைப்படங்களை எடுத்துள்ளது.

அதில், சூரியனை சுற்றியுள்ள குரோமோஸ்பியர் மண்டலத்தை வெவ்வேறு அலை நீளத்தில் படம்பிடித்துள்ளது. (நி-5)

## வீட்டோ அதிகாரத்தை பயன்ப
## வடகொரியா கண்டனம்,



**(பியாங்யாங்)**

**ஐ.நா சபையில் போர் இடைநிற
கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை அ
எனும் சிறப்பு அதிகாரத்தைப் பயன்ப
வடகொரியா கண்டனம் தெரிவித்த அ
அமெரிக்கா எடுத்துள்ள சரியான நி
தெரிவித்துள்ளார்.**

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்க போவதாக உறுதி எடுத்து பாலஸ்தீன காசா முனைப் பகுதி மீது இஸ்ரேல் தொடங்கிய போர் தற்போது 60 நாட்களுக்கும் மேலாக தீவிரமாக நடந்து வருகிறது.

இதுவரை 17,700 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாகவும் 48,800 பேர் காயமடைந்துள்ளதாகவும் பாலஸ்தீன காசா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று ஐ.நா சபையில் போர் இடைநிறுத்தத்தை, வலியுறுத்திக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை அமெரிக்கா தனது "வீட்டோ" எனும் சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி தடுத்து நிறுத்தியது.

இதுகுறித்து வடகொரியாவின் சர்வதேச அமைப்புகளுக்கான துணை வெளியுறவுத்துறை அமைச்சர் கிம் சன் கியோங் கூறும்போது, பல் லாயிரக்கணக்கான பொது மக்களைக் கொன்று குவித்த கூட்டாளியைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வது சட்டவிரோத மற்றும் நியாயமற்ற இரட்டைத் தரங்களின் வெளிப்பாடு மட்டுமல்ல, மனிதாபிமானமற்ற தீமையின் உச்சமும் ஆகும்" எனத்

## செல்வாக்கு மிக்க உலகத் தலைவர்களில் பிரதமர் மோடி மீண்டும் முதலிடம்



(டில்லி)

செல்வாக்கு மிக்க உலகத் தலைவர்களில் இந்தியப் பிரதமர் மோடி மீண்டும் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

இந்தப் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி பைடன், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆகியோர் பின்தங்கியுள்ளனர்.

அமெரிக்க தலைநகர் வோஷிங்டனை தலைமையிடமாகக் கொண்டு பிரபல கருத்து கணிப்பு நிறுவனமான 'மோர்னிங் கன் சல்ட்' நிறுவனம் நடத்திய கருத்து கணிப்பிலேயே மோடி மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். அவருக்கு ஆதரவாக 76 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர்.

மெக்சிக்கோ ஜனாதிபதி லோபஸ் ஒபரடோர் 66 சதவீத வாக்குகளுடன் இரண்டாம் இடத்திலும் சுவிட்சர்லாந்து ஜனாதிபதி அலைன் பெர்செட் 58 சதவீத வாக்குகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

இந்த ஆண்டில் கடந்த பெப்ரவரி, ஏப்ரல், செப்டெம்பர் மாதங்களில் "மோர்னிங் கன்சல்ட்" நிறுவனம் உலக தலைவர்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டது.

கடந்த பெப்ரவரியில் 78 சதவீத வாக்குகள், கடந்த ஏப்ரல், செப்டெம்பரில் 76 சதவீத வாக்குகளுடன் பிரதமர் மோடி முதலிடம் பிடித்திருந்தார்.

கடந்த 9 ஆண்டுகளில் 'மோர்னிங் கன்சல்ட்" வெளியிட்ட கருத்துக் கணிப்பு முடிவுகளில் 75 சதவீதம் முதல் 80 சதவீத வாக்குகளைப் பெற்று பிரதமர் மோடி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். (நி-5)


## பிலிப்பைன்ஸ் படகுக
## சீனக்கப்பல் நீர்த்தாரை பிர



(பீஜி
தெ
பைன்
மீது சீ
த்தான
கொன
யுள்ள
சீன
இரு
கடலி
உரி
நிலை

## பெண்ணின் கண்களில்
## உயிருடன் மீட்கப்பட்ட 60

### சீனாவில் அதிர்ச்சி சம்பவம்




(பீஜி
சீன
ணொரு
60 உ
சிகிச்சை
துவர்கள்
பாதி
கண்க
டுள்ளது
போக்க
போது
ண்ணி
ந்துள்ள
இ
அந்த பெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ன்படுத்திய அமெரிக்காவுக்கு ...ம், நெதன்யாகு பாராட்டு

...டநிறுத்தத்தை வலியுறுத்திக் ...த அமெரிக்கா, தனது "வீட்டோ" ...யன்படுத்தி முறியடித்தது. இதற்கு ...த அதேவேளை இஸ்ரேல் பிரதமர் ...ன நிலைப்பாட்டை பாராட்டுவதாக



தெரிவித்தார்.


இப்பின்னணியில் தங்களின் நிலைப்பாடு குறித்து இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "அமெரிக்கா எடுத்துள்ள சரியான நிலைப்பாட்டை நான் பாராட்டுகிறேன். ஹமாஸ் அமைப்பை ஒழிக்க நாங்கள் நடத்தி வரும் போர் மிக நியாயமானதுதான். அது மேலும் தொடரும்" என திட்ட வட்டமாக அறிவித்துள்ளார்.

இதே கருத்தை வலியுறுத்தும் வகையில் இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் எலி கோஹென் "மனித இனத்திற்கு எதிரான குற்றங்களையும் போர் குற்றங்களையும் நடத்தும் ஹமாஸ் அமைப்பினர், போர் இடைநிறுத்தம் ஏற்பட்டால் மீண்டும் காசா முனை பகுதியில் ஆதிக்கம் செலுத்த தொடங்கி விடுவார்கள்" என தெரிவித்தார்.

இஸ்ரேலின் ராணுவ தலைவர் ஹெர்சி ஹலேவி தங்கள் தாக்குதலில் இன்னமும் அழுத்தம் காட்டப்படும் என எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், காசாவில் 36 சதவீத வீடுகளில் உணவுப் பற்றாக்குறை நெருக்கடியாக மாறியுள்ளது என்றும் காசா முனை பகுதியில் பாதுகாப்பான இடம் என ஏதுமில்லை என்றும் காசா பகுதியின் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது. (நி-5)

## இத்தாலியில் தீ விபத்து 4 பேர் பலி, பலர் காயம்



(உரோம்)

இத்தாலி தலைநகர் உரோம் அருகே டிவொலி பகுதி யிலுள்ள மருத்துவமனையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தானது கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மருத்துவமனை பிரதான தளத்தில் தீ வேகமாக பரவியதையடுத்து தீயணைப்பு மீட்புக் குழுவினருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து விரை ந்து வந்த மீட்புக் குழுவினர் மருத்துவமனையில் விபத்தில் சிக்கிய நோயாளிகளை வெளியேற்றினர்.

ஆனாலும் இந்த தீ விபத்தில் 4 பேர் உயிரிழந்ததோடு மேலும் குழந்தைகள் உட்பட 200 பேர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (நி-5)

## ...தகள் மீது ...பிரயோகம்

(பீஜிங்)

தென் சீன கடலில் பிலிப்பைன்ஸ் கடற்றொழில் படகுகள் மீது சீன கடற்படைக் கப்பல் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளது.

சீனா, பிலிப்பைன்ஸ் ஆகிய இரு நாடுகளுமே தென் சீன கடலின் மணலத்திட்டு ஒன்றை உரிமை கொண்டாடி வரும் நிலையில் சீன கடற்படையுடன் சீன ஆயுதக் குழுவினரும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டு பிலிப்பைன்ஸ் கப்பல்களை விரட்டியடித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


சீனாவின் இந்தச் செயல் மிகவும் ஆபத்தானது என்று பிலிப்பைன்ஸும், அதன் நட்பு நாடான அமெரிக்காவும் கண் டனம் தெரிவித்துள்ளன.

தென் சீன கடற்பகுதி முழுவதும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட சீனா முயன்று வரும் நிலையில் இந்த செயற் பாடானது சர்வதேச கடல் வழித்தட உரிமையைப் பறிப்பதாக அமெரிக்கா கருதுவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## உலகின் மிகப்பெரிய கிறிஸ்மஸ் தாத்தா ஓவியம் சுவிஸில்

(ஜெனிவா)

மேற்கு சுவிட்சர்லாந்தில் உள்ள மலையில் உள்ளூர் கலைஞர் ஒருவர் வரைந்த சாண்டா கிறிஸ்மஸ் தாத்தாவின் ஓவியம் உலகின் மிகப்பெரிய கிறிஸ்மஸ் தாத்தா ஓவியம் என்று பெயரிடப்பட்டுள்ளதாக சுவிஸ் ஊட்கங்கள் தெரிவித்துள்ளன.



700 மீற்றர் நீளமும் 400 மீற்றர் உயரமும் கொண்ட ஓவியமே இந்த சாதனை படைத்துள்ளது.

மேற்கு சுவிட்சர்லாந்தின் Montreux என்ற இடத்தில் 2300 மீற்றர் உயரமுள்ள மலையில் 2300 மீற்றர் உயரமுள்ள சுவிஸ் ஓவியர் Jerry Hofstetter இனால் பெரும் முயற்சியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஓவியத்தை உருவாக்குவதில் வானிலை, மேகங்கள் மற்றும் சுற்றுச் சூழல் நிலைமைகள் சவாலாக இருந்ததாக ஓவியர் தெரிவித்துள்ளார். (நி-5)

## ...ல் இருந்து ...60 புழுக்கள்

(பீஜிங்)

சீனாவில் மிரர் என்ற பெண்ணொருவரின் கண்களிலிருந்து சுமார் 60 உயிருள்ள புழுக்களை அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றி மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு கண்களில் அடிக்கடி அரிப்பு ஏற்பட்டுள்ளது. பிறகு, கூச்ச உணர்வைப் போக்க அவர் கண்களைத் தேய்த்த போது கண்ணில் இருந்து ஒரு ஒட்டுண்ணிப் புழு வெளியே வந்து விழுந்துள்ளது.


இதைக் கண்டு அதிர்ச்சிடையந்த அந்த பெண் பயந்துபோய் உடனடியாக சீனாவின் குன்மிங்கில் உள்ள மருத்துவமனையை அணுகியுள்ளார்.

இரு கண்களிலும் கருவிழி யில் உயிருள்ள புழுக்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

இதில் அவரது வலது கண்ணில் இருந்து 40இற்கும் மேற்பட்ட புழுக்களையும் இடது கண்ணில் இருந்து 10இற்கும் மேற்பட்ட புழுக்களையும் அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றினர். மொத்தத்தில், மருத்துவர்கள் அந்த பெண்ணின் கண்களில் இருந்து 60 இற்கும் மேற்பட்ட ஒட்டுண்ணிகளை அகற்றியதாக பெண் மிரர் தெரிவித்துள்ளார்.

பொதுவாக ஈ கடித்தால் பரவும் ஃபிலாரியோடியா வகையைச் சேர்ந்த வட்ட ப்புழுக்களால் அந்தப் பெண் பாதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5)

## 2024 இல் பயணமாகவுள்ள உலகின் மிகப்பெரிய கப்பல்



2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் டைட்டானிக்கை விட 5 மடங்கு பெரியதும் உலகின் மிகப்பெரியதுமான பயணிகள் கப்பல் தனது முதல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

Icon of the Seas என பெயரிடப்பட்டுள்ள இந்த கப்பல் Royal Caribbean International நிறுவனத்தினால் இயக்கப்படவுள்ளது.

இந்தக் கப்பலில் உலகின் மிகப்பெரிய நீர்ப்பூங்கா, 9 நீர்ச்சுழல்கள், 7 குளங்கள் மற்றும் உணவு மற்றும் பொழுதுபோக்கிற்காக நாற்பதுக்கும் மேற்பட்ட இடங்கள் உள்ளன. 5,610 விருந்தினர்கள் ஒரே நேரத்தில் தங்கக்கூடிய வசதிகளை கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பனை தரும் போசாக்குணவும் மருத்துவப்பண்புகளும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பனை மரம் ஓடகம், தாலம், புற்பதி, தாளி என் றும் அழைக்கப்படுகிறது. பனையில் ஆண் மரமும் பெண் மரமும் காணப்படுகிறது. ஆண் பனையின் பாளையில் இருந்து இளைக்க கதிர்கள் நீண்டு திரண்டிருக்கும். அவற்றி நின்றும் சிறு ஆண் பூக்கள் விரியும். பூவில் தடித்த புற விதழ்களும் 03 அகவிதழ்களும் 06 மகரந்த கால்களும் தோன்றும். பெண் பனையின் பாளையில் இரு ந்து பட்டையாக 03 புற விதழ்களும் 03 அகவிதழ்களும் கோள வடிவான பெண்ணகத்தைக் கொண்டிருக்கும். இது போல மகரந்தச் சேர்க்கையின் பின்னர் பிஞ்சாகி பனங்காயாகும். இளங் காயிலுள்ள மூன்று நுங்குகளும் முற்றி விதைகளாகிவிடும். காய் முற்றிப் பழமான பின்னர் பனம் பழம் தானே விழும். அதற் குள் மூன்று விதைகள் இருக்கும். பழைமை வாய்ந்த பனை மரம் இன்னும் பயன் கொடுத்துக் கொண்டே உள்ளது.

அதிலும் உணவு வகைகளில் மட்டுமன்றி இய ற்கை மருந்துணவாகவும் அமைவதை இன்றைய விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் பனையின் பயன்பாடுகள் மக்களால் மறக்கப்பட்டும் மறைந்தும் வருவது செயற்கை வாழ்க்கை முறை யில் இன்றைய மக்கள் ஊறிக் கிடப்பதேயாகும். எனவே பனை மரத்தின் பயன்களை மருத்துவ நோக்கில் ஆராய்வோமாயின்,

### ஒடியற்கூழ்

யாழ்ப்பாண மக்களிடையே பிரபல்யமானது ஒடியற் கூழாகும். இதில் ஒடியல்மா, பலாக் காய், பயற்றங்காய், செத்தல் மிளகாய், மஞ்சள், பழப் புளி, உப்பு என்பன சேர்கி ன்றன.

பயற்றங்காயை சிறுசிறு துண்டுகளாக ஒடித்து அத னுடன் பலாக்காயின் சுளை யைப் போட்டு நீர்விட்டு நன்கு அவிய விட்டு வெந் ததும் அதனுடன் சிறிது நீரில் புளியைக் கரைத்து அதில் ஒடியல்மாவையும் மஞ்சள் துண்டையும் மிளகாயையும் அரைத்தும் கரைத்தும் சேர்த்து ஊற்றி ஐந்து நிமிடங்கள் வரை துளாவித் கொண்டிருந்து கொதிக்க விட்டு இறக்கவும். பின் கடுகு, சீரகம், வெந்தயம், கறிவேப்பிலை என்பவற்றை தாளித்துப் போட வேண்டும். பலாக்காய் கிடைக்காவிட்டால் மரவள்ளிக்கிழங்கை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி சேர்த் துக் கொள்ளலாம்.

பழைய ஒடியல்மாவாக இருந்தால் அதை 4-5 முறை நீரில் ஊற வைத்துப் பிழிந்து தும்பு போக்கி எடுத்துக் கொள்வார். இக் கூழ் பசியைத்



தணிப்பதுடன் போசாக்கு மிக்கதாகவும் விளங்குகிறது. மலத்தை இளக்கி நன்கு வெளியேற்றும். எனவே இக் கூழை இடையிடையே தயாரித்து பருகி வருவதால் மலம் நன்கு வெளியேறி வாதம் முதலிய தோஷங்கள் நீங்கி சமனிலை பேணப்படுவதால் மூன்று தோஷங்களில் சமநிலை பேணப்பட்டு சரீர ஆரோக்கியமும் பேணப்படும். இன்றைய விஞ்ஞான ஆய்வுகள் கூட நார்த் தன்மையான உணவுகள், உணவுக்கால்வாயில் புற்று நோய் ஏற்படுவதை தடுக்கின் றது என்பதை வலியுறுத்துகின்றது. ஒடியல்மாவில் தேவையான அளவு நார்ச் சத்து உள்ளது என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

### 100 கிராம் ஒடியலில் உள்ள சத்துக்கள்

ஈரலிப்பு -10.08 கிராம், சக்தி-320 கிராம் கலோரி, புரதம் 3.1கிராம், கொழுப்பு 2.2 கிராம், காபோவை தரேற்று-77 மில்லி கிராம், கல்சியம் -44 மில்லி கிராம், இரும்பு-0.8 மில்லி கிராம், நார்ச்சத்து-5.6 கிராம்.

குடலைச் சுத்தம் செய்வ தில் ஒடியற்கூழுக்கு முக்கிய பங்குண்டு.

### பதனீர்

செப்பிதன் பதனீர் வெம்மை தீர்த்திடு நுங்க ருத்தில் வெப்பு நா வரட்சி பித்தம் விலகிடுங் குளிர்ச் சியுண்டாம் உப்பிச முறும் பழத்தை உண்டிட உடல் கனக்கும்.

### பதார்த்த சூடாமணி

கோடை காலத்திற்கு ஏற்றது பதனீர். இக்காலங்களில் ஏற்படும் சின்னமுத்து, பொக்குளிப்பான் போன்ற நிலைமைகளில் உணவுக்கால் வாய் அனிச சவ்வுகளிலும் வாயிலும் ஏற்படும் புண்பாட் டிற்கு அரு மருந்தாக அமை யும். பதனீரில் உயிர்ச்சத்து B, இரும்புச்சத்து என்பன அதிகமுண்டு. குளிர்ச்சியான பானம் மட்டுமல்ல போஷாக்கு மிக்கதுமாகும்.

### 100 கிராம் பதனீரிலுள்ள சத்துக்கள்

ஈரலிப்பு-86 கிராம், புரதம் - 0.4 கிராம், காபோ வைத ரேற்று-13.5 கிராம், கல்சியம்-7 மில்லி கிராம், பொஸ்பரஸ்-14 மில்லி கிராம், இரும்புச்சத்து - 3.67 மி.கிராம், உயிர்சத்து-C 13 மில்லி கிராம்.

### நுங்கு

வெப்ப காலமாகிய சித்திரை, வைகாசி மாதங்க ளில் நுங்கு கிடைக்கிறது. இது உடல் உஷ்ணத்தைத் தணித்து உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடியது. பித்தத்தை சமப்படுத்தும்.

### 100 கிராம் நுங்கில் உள்ள சத்துக்கள்

ஈரலிப்பு-82.3 கிராம், சக்தி-29 கிராம் கலோரி, புரதம் 10.8 கிராம், கொழு ப்பு-0.3 கிராம், காபோவை தரேற்று-6.5 கிராம், கல்சி யம்-69 மில்லி கிராம், பொஸ்பரஸ்-110 மில்லி கிராம், இரும்பு-0.9 கிராம், உயிர்ச்சத்து-B1 10 மைக் ரோனியம்.



எம் மக்கள் பனம் பழ த்தை சுட்டு அதன் மஞ்சள் நிறக்களியை உண்பார். இதில் உயிர்க்சத்து A இன் முன்னோடியான பீற்றா கரோட்டின் 3200 மைக்ரோ கிராம் 100 பழத்திலி ருந்து கிடைக்கின்றது. இத னால் கண்பார்வை தெளி வாவதுடன் தோலினையும் மென்மையாகவும் தொற் றுக்கள் ஏற்படாமலும் பாது காக்கின்றது. அத்துடன் மலத்தை இலகுவாக வெளியேற்றவும் உதவும்.

பனம் களியிலிருந்து தயாரிக்கப்படும் பனங்காய் பலகாரத்தில் கல்சியம் பொஸ் பரஸ், இரும்பு, உயிர்ச்சத் துக்கள் C ஆகிய சத்துக்கள் அடங்கியிருப்பதால் உட லின் உள் உறுப்புக்களின் ஆரோக்கியத்திற்கு உதவு கின்றது. பனங்காய் பணி யாரம் தயாரிக்கும் போது அரிசிமா, கோதுமைமா விற்குப் பதில் சாமையரிசி மாவைப் பயன் பயன்படுத் தினால் இலகுவாக சமி பாடடையக் கூடியதாகவும் இருக்கும்.

### பனங்கட்டி

பனங்கட்டி சத்துமிக்க ஒரு உப உணவாகும். பனங்கட் டியில் கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து உயிர்ச்சத்து B, பொட்டாசி யம் ஆகியன அதி களவில் காணப்படுகின் றது. எனவே தான் பனங்கட்டியை பயன் படுத்தி ஆடிக்கூழ், சிறுவர்களுக்கான கஞ்சி வகை, எள்ளுப்பாகு போன்றன தயாரிக்கப்படுகின் றன. பனங்கட்டி பாலூட்டும் தாய்மார்கள், கர்ப் பிணிப் பெண் களுக்கு சிறந்ததும் அவசியமானது மாகும்.


எனவே எம்மக்கள் சீனிக்குப் பதில் பனங்கட் டியைப் பயன்படுத்தப் பழகிக் கொள்ளல் மருத்துவ நோக்தில் ஆரோக்கியமாகும். எனவே தான் சித்த மருந் துகளுக்கு அநேகமாக பனங்கட்டி அனுபானமாக கொடுக்கப்படுகிறது.

பனங்கட்டியில் தாழ்த் தப்படாத வெல்லம் (Non-reducing sugar) கூடுத லாக இருப்பதால் நோயிலி ருந்து விடுபட்டு உடல் தேறி வருபவர்களுக்கு பருக்கும் கொத்த மல்லித் தண்ணீர், கற்பூர வள்ளிச்சாறு போன்ற வற்றில் பனங்கற்கண்டு அனுபானத்தில் வழங்கப் படுகிறது. இது குழந்தைகளு க்கு மலச் சிக்கல், சளி என் பன ஏற்டாமல் பாதுகாக்கின்றது.

### பனங்கிழங்கும் புழுக் கொடியலும்

அவித்த பனக்கிழங்கை இரண்டாகப் பிளந்து புழுக் கொடியலாகச் செய்து வருடம் முழுவதும் பயன்படுத்துவர். புழுக்கொடியல் மாவை சத் துமா போன்றும் பயன்படு த்தலாம். புழுக்கொடியல்மா, தேங்காய்ப்பூ, சீனி சேர்த்து குழைத்து மடித்துப் பய்ன்படுத்தலாம்.

இது விசேடமாக முதி யோருக்குகந்த சத்துணவாகும்.



புழுக்கொடியலில் கல்சியம், பொஸ்பரஸ், இரு ம்புச்சத்து கணிசமான அளவு உண்டு.

பனங்குருத்தில் கல்சி யம், பொஸ்பரஸ், இரும் புச்சத்து, பீற்றாகரோட்டின் போன்ற சத் துக்கள் அதிகம் காணப்படுகின் றன. பனங் குருத்து சாப்பிடும் பழக்கம் இப்போது அருகி மறந்து வந்துள்ளது.

இன்றைய இளைய சந்ததிக்கு ஏற்ற வகையில் பனங்களியில் கேக் கூடத் தயாரிக்கலாம். 1/2 கிலோ கோதுமைமாவிற்கு 1/2 கிலோ சீனி, 150 கிராம் மாஜரின், 100 கிராம் பனங்களி சேர்த்து கேக் அடிப்பது போல் அடித்து தீ ஆவியில் அவித்து எடுத்துப் பயன்படுத்தவும். பனம் விதையிலுள்ள பூரானை பயன்படுத்தி பூரான் புட்டும் அவித்துச் சாப்பிடலாம். தேங்காய்ப்பூவிற்கு பதில் பூரானை சிறு சிறு குறுணலாக அரிந்து புட்டு மாவுடன் சேர்த்து அவித் துச் சாப்பிடலாம்.

### 100 கிராம் பூரானிலுள்ள சத்துக்கள்

ஈரலிப்பு-61.4 கிராம், புரதம்-11.8 கிராம், கொழு ப்பு-0.2 கிராம், காபோ வைத ரேற்று-6.5 கிராம், கல்சியம்-198 மில்லி கிராம், பொஸ் பரஸ்-180 மில்லி கிராம், இரும்பு-4 கிராம்.

தமிழ் மக்களின் போஷாக்குணவுகளிலும் பொருளாதாரத் திலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந் தவை பனையிலிருந்து கிடைக்கும் உணவாகும். இவையாவும் மருத்துவ நோக்கில் கூட ஏற்புடையனவாக காணப்படுகின் றன.

குறிப்பு - பனங்கிழங்கு, ஒடியல்மா என்பன பூஞ்சணம் பிடிக்கும் போது அப் பூஞ்சனம் Aflatoxin என் னும் ஒரு நஞ்சை சுரக்கி ன்றது. அது ஈரலில் புற்று நோயை ஏற்படுத்தக் கூடியது.


பூஞ்சணம் பிடிப்பதற்கு முக்கிய காரணம் பதப்படுத்தி களஞ்சியப்படுத்தத் தெரியாமை ஆகும். அன்றைய காலத்தில் ஈர்க்கில் ஒடி யலை அல்லது புழுக்கொடியலை கோர்த்து காய விடுவார்கள்.

எனவே பூஞ்சணம் பிடிப்பதற்கு சாத்தியம் குறைவாகும். களஞ்சியப்படுத் துவதற்கும் இயற்கை முறைகளை பயன்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நெற்பயிரைத் தாக்கும் மடிச்சுக்கட்டி

# விழிப்புணர்வு நடவடிக்கையில் விவசாய உத்தியோகத்தர்கள்



(கண்டாவளை)

கிளிநாச்சி மாவட்டத்தில் தொடரும் மழையுடனான காலநிலை காரணமாக நெற்செய்கைகளில் பாரிய அளவில் மடிச்சுக்கட்டி மற்றும் கபில நிறத்தத்தி, வெண்முதுகுத் தத்தி, எரிபந்தம் போன்ற நோய்களால் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 28,400கெக்ரேயர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது இவ்வாறான செய்கைகளில் முரசுமோட்டை, கண்டாவளை, பூநகரி, பளை, அக்கராயன் போன்ற பகுதிகளிலே அதிகளவான நோய்த்தாக்கம் ஏற்பட்டு பெருமளவான பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக நெல் வயல்களில் மடிச்சுகட்டி வென்முதுகுதத்தி கபிலநிறத்தத்தி எரிபந்தம் போன்ற நோய்களுக்கு உள்ளாகி பெருமளவான பயிர்கள் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு நோய் தாக்கங்களால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன், பூநகரி, முழங்காவில் ஆகிய பகுதிகளுக்கு பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், பணிமனையின் உத்தியோகத்தர்கள் கள விஜயம் மேற்கொண்டு விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியதுடன் நோயை கட்டுப்படுத்தக் கூடிய வழிமுறைகள் தொடர்பிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.(நி-5-315)

# பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்போம் கிளிநொச்சியில் விழிப்புணர்வுப் பேரணி



(கண்டாவளை)

கிளிநொச்சியில் உலக மனித உரிமை தினத்தை முன்னிட்டு இலங்கைப் பெண்கள் மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுப் பேரணியும் கருத்தமர்வும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உலக மனித உரிமைகள் தினமான நேற்று மேற்படி நிகழ்வானது கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் இருந்து பேரணியாக ஆரம்பமாகி மாவட்டச் செயலக திறன்விருத்தி மண்டபத்தை வந்தடைந்தது.

குறித்த பேரணியின் போது பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்போம், சிறுவர்களை பாதுகாப்போம், போதையற்ற உலகத்தை உருவாக்குவோம், குடும்ப வன்முறைகளை தடுப்போம் போன்ற பல்வேறு கோஷங்களை மும்மொழிகளிலும் எழுப்பியவாறு குறித்த பேரணி நகர்ந்துள்ளது. (நி-5-315)

# பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வினை கூறுங்கள்

## துரைராசா ரவிகரன்

(வவுனியா)

மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டுமெனில் முதல் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் தீர்வினை கூறுங்கள்.அந்த முடிவில்லாமல் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டிப்பது தவறு என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

நேற்று மனித உரிமைகள் தினத்தில் இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

எங்கள் நிலங்கள் பறிக்கப்படுகின்றன, மதங்கள் அழிக்கப்படுகின்றன, கடலிலே மீன்பிடிக்க முடியவில்லை, வயலிலே பயிர்கள் , விவசாயம், தோட்ட செய்கைகள் செய்ய முடியவில்லை, காணாமலாக்கப்பட்ட உறவுகளை தேடி கிடைக்க வில்லை, சிறையிலிருப்பவர்களை விடுவிக்கவில்லை, இவ்வாறு இலங்கை அரசாங்கம் செய்யும் போது அதனை பொறுத்து வேடிக்கை பார்ப்பதுதான் ஐ.நா வின், மனித உரிமை ஆணைக் குழுவின் வேலை என்றால் அவர்களுக்கு ஏன் இந்த சர்வதேச தினம்.?

மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டுமெனில் முதல் இலங்கையில் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் தீர்வினை கூறுங்கள்.அந்த முடிவில்லாமல் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டிப்பது தவறு என மேலும் தெரிவித்தார். (நி-5-299)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2986

வர்ஜனி




மிதுனா




யாதவி




துரியதன்




கிஷான்




வைத்தீஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 350





நந்தினி தொடர்ந்து, "குந்தவை தேவியைப் பார்த்த கண்களினால் என்னைப் பார்க்க முடியாமலிருப்பதில் வியப்பில்லை." என்று கூறிப் புன்னகை புரிந்தாள்.

அந்தச் சொற்கள் கந்தன் மாறனுடைய நெஞ்சைப் பிளந்தன. அவளுடைய புன்னகையோ அவனுடைய தலையைக் கிறுகிறுக்கச் செய்தது.

தட்டுத் தடுமாறி, "ஆயிரம் குந்தவைகள் ஒரு நந்தினி தேவிக்கு இணையாக மாட்டார்கள்." என்றான்.

"ஆயினும், இளைய பிராட்டி விரலை அசைத்தால் வானுலகம் சென்று இந்திரனுடைய சிம்மாசனத்தைக் கொண்டு வந்து விடுவீர்கள். நான் வருந்தி வேண்டிக் கொண்டால், உட்காரக்கூடமாட்டீர்கள்."

கந்தன்மாறன் உடனே எதிரிலிருந்த மேடையில் உட்கார்ந்து "தாங்கள் பணித்தால் பிரம்மலோகம் சென்று பிரம்மாவின் தலையைக் கொய்து கொண்டு வருவேன்!" என்றான்.

நந்தினி நடுநடுங்கினாள். கந்தன்மாறனைப் பாராமல் வேறு பக்கம் பார்த்துக் கொண்டு, "பரமசிவன் கொய்தது போகப் பிரம்மாவுக்கு மிச்சம் நாலு தலைகள் இருக்கின்றன. தாங்கள் இன்னொன்றைக் கொய்தாலும் பிரம்மா பிழைத்துப் போவார்!" என்றாள்.

"தேவி! வேறு எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால் குந்தவை தேவியைப் பற்றி மட்டும் என்னிடம் புகழ்ந்து பேச வேண்டாம். சிநேகிதத் துரோகியான வந்தியத்தேவனுக்கு அவள் பரிந்து பேசியதை நினைத்தால் என்னுடைய இரத்தம் கொதிக்கிறது!" என்றான் கந்தன்மாறன்.

"ஆனாலும் இன்று காலையில் தங்களுடைய கற்பனா சக்தி அபாரமாயிருந்தது என்னவோ உண்மைதான்! தங்களுக்கும் தங்கள் நண்பனுக்கும் நடந்த துவந்த யுத்தம் பற்றி எவ்வளவு கற்பனையாகப் பேசினீர்கள்?" என்று நந்தினி கூறிய வார்த்தைகள் கந்தன்மாறனுக்குச் சிறிது வெட்கத்தை உண்டாக்கின.

"அவனைச் சந்தித்தது எப்படி என்பதற்கு ஏதாவது சொல்ல வேண்டும் அல்லவா? அதனால் சொன்னேன். அவன் என்னை முதுகில் குத்தியது என்னமோ உண்மைதானே!" என்றான்.

"ஐயா! அன்று நடந்ததையெல்லாம் தாங்கள் மறுபடியும் ஒரு தடவை ஞாபகப் படுத்திக்கொண்டு பார்ப்பது நல்லதல்லவா?" என்றாள் நந்தினி. "தாங்கள்கூட என் வார்த்தையைச் சந்தேகிக்கிறீர்களா என்ன?"

"சந்தேகிக்கவில்லை. ஆயினும் தாங்கள் சில விஷயங்களை மறந்து விட்டிருக்கிறீர்கள். வந்தியத்தேவனை என்றைக்காவது ஒருநாள் சிறைப்படுத்திக் கொண்டு வருவார்கள். அப்போது தாங்கள் அவன் மீது சாட்டும் குற்றம் உண்மையென்று ருசுவாக வேண்டும் அல்லவா?"

"அதில் எனக்கு ஒன்றும் சிரத்தை இல்லை. அவனை இன்னமும் மன்னித்து விடவே விரும்புகிறேன்."

"தங்களுடைய பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன். ஆயினும் நமக்குள் உண்மையை நிச்சயம் செய்து கொள்வது நல்லது. அன்றிரவு நடந்ததையெல்லாம் மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்திக் கொண்டு பாருங்கள். நிலவறையின் வழியாகத் தாங்கள் வந்தபோது பழுவேட்டரையரையும் என்னையும் வழியில் சந்தித்தீர்கள். தங்களுக்கு அது நினைவிருக்கிறதா?"

"நன்றாய் நினைவிருக்கிறது. என் உடம்பில் உயிர் உள்ளவரையில் அதை நான் மறக்க முடியாது."

"அப்போது தாங்கள் என்ன சொன்னீர்கள் என்பதும் நினைவிருக்கிறதல்லவா?"

"என்ன சொன்னேன் என்பது நினைவில்லை. தங்களைப் பார்த்தபோது மெய் மறந்து போனேன்."


"ஆனால் தாங்கள் சொன்னது எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. 'ஐயா! தங்கள் குமாரியின் அழகைப்பற்றி எவ்வளவோ நான் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் அதெல்லாம் உண்மைக்கு உறைபோடக் காணாது' என்று சொன்னீர்கள்!"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குழந்தையின் அழுகை



அக்பர் சக்கரவர்த்தியை காக்காய் பிடிப்பதற்காக அவருடைய சில அதிகாரிகள் எப்போதும் அவரைச் சூழ்ந்து கொண்டு, அவர் சொல்வதற்கெல்லாம் ஆமாம் போட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடைய செயலைக் கண்டு முகம் சுளித்த பீர்பால், 'இவர்கள் அக்பரின் பணி ஆளர்களா? இல்லை எதற்கெடுத்தாலும் வாலை யாட்டும் நாய்களா?' என்று எண்ணினார். தன் மனத்தில் தோன்றியதை ஒருநாள் அவர்களிடம் பீர்பால் கூறிவிட, அவர்கள் வெகுண்டனர். "பீர்பால்! என்ன தைரியம் இருந்தால் எங்களை நாய்கள் என்று குறிப்பிடுவ ாய். நீ எங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்!" என்று கோபத்தில் எகிறிக் குதித்தனர்.

"ஏன் உங்களை நாய்கள் என்று சொல்லக் கூடாது?" என்று பீர்பால் கேட்டதும் "நாங்கள் ஆறறிவு படைத்த மனிதர்கள்!" என்றனர். "அது தான் தெரிகிறதே!" என்றார் பீர்பால் ஏளனத்துடன். "அப்படியெனில் ஏன் எங்களை நாய்கள் என்று சொல்கிறாய்?" என்று கேட்டனர்.

"தவறுதான்! ஏனெனில் நாய்களுக்கு வால் உண்டு. உங்களுக்கில்லை" என்றார் பீர்பால். "நாக்கை அடக்கிப் பேசு!" என்று அவர்கள் சீறி விழ, "நான் என்ன பிரம்மாதமாக சொல்லி விட்டேன் என்று நீங்கள் இப்படி கோபத்தில் குதிக்கிறீர்கள்? உங்களுக்கு தைரியம் இல்லை என்றும் நீங்கள் கோழைகள் என்றும் கூறுகிறேன். அது தவறா?" என்றார் பீர்பால்.

"சரி, அதைவிடு! நாங்கள் பயந்தாங்கொள்ளிகளாகவே இருந்து விட்டுப் போகிறோம். ஆனால் நீ எங்களை விட தைரியசாலியா?" என்று ஒருவன் பீர்பாலிடம் கேட்டான். "ஆமாம், சந்தேகம் இல்லாமல் என்று மார்தட்டிய பீர்பால், "உங்களுக்கு என் தைரியத்தை நான் எந்த விதத்தில் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்று என்னிடம் சொல்லுங்கள்!" என்றார். "முன் கூட்டியே சக்கரவர்த்தியிடம் அனுமதி பெறாமல் தர்பாருக்கு உன்னால் தாம தமாக வரமுடியுமா?" என்று ஒருவர் சவால் விட்டார்.

அக்பர் சபைக்கு வரு முன்னரே, மற்றவர்கள் வந்துவிட வேண்டும் என்பது அக்பரின் கட்டளை. அப்படி யாராவது குறித்த நேரத்தில் வர முடியவில்லையெனில், தாம தமாக வருவதற்கு முன் கூட்டியே தகவல் அனுப்ப வேண்டும். அந்த நியதியை மீறுபவர்களின் மீது சக்கரவர்த்தி கடுமையான நடவடிக்கை எடுப்பதுஉண்டு. இந்த விஷயம் பீர்பாலுக்கும் தெரியும். ஆயினும், முன்வைத்த காலைப்பின் வைக்க மனமின்றி, "சரி! நாளைக்கு நான் முன் அனுமதி இன்றி தாமதமாக சபைக்கு வந்து காட்டுகிறேன்!" என்று கூறினார்.

நாளைக்கு பீர்பாலுக்கு சக்கரவர்த்தி கடுமையான தண்டனை விதிப்பார் என்று எண்ணியவாறு அவர்கள் மகிழ்ச்சியுடன் சென்றனர். மறுநாள் அக்பர் தர்பாரில் நுழைந்த போது, பீர்பாலைத் தவிர மற்றவர் அனைவரும் ஏற்கெனவே வந்து இருந்தனர். அனைவரும் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் செலுத்திய பிறகு தங்களுடைய ஆசனங்களில் அமர்ந்தனர். அக்பரும் தன் ஆசனத்தில் அமர்ந்தார். பிறகு சபையோரை ஒருமுறை பார்த்த அக்பர் அவர்களில் பீர்பால் மட்டும் இல்லாததை உணர்ந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயற்சி செய். உண்மையாய் இருக்க மட்டுமே உழைத்திடு.

– ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மின் கட்டணத்தில் காட்டும் கருசனையை மின்சாரத்திலும் காட்டுங்கள்

நாட்டில் நேற்று முன்தினம் (09) மின்சாரம் தடைப்பட்டதால் நாடு முழுமையும் இருளில் மூழ்கியது.

சுமார் ஆறு மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்பட்டதனால் இந்தநிலைமை ஏற்பட்டது.

இயல்புநிலை உள்ளபோது ஒரு நாட்டில் மின்சாரம் தடைப்படுவதென்பது சாதாரண விடயமன்று.

மாறாக நாடு பூராகவும் மின்சாரம் தடைப்படுகிறதெனும்போது, அதனால் எத்தனையோ பாதிப்புக்கள் ஏற்படும் என்பது தெரிந்த விடயமே.

அதாவது ஒரு நாட்டில் ஆறு மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்படும்போது அது அரச, தனியார் துறைகளில் ஏகப்பட்ட நட்டத்தை ஏற்படுத்தவே செய்யும்.

தவிர, இவ்வாறு திடீரென மின்சாரம் தடைப்படுகிறதெனில், அங்கு அரச நிர்வாகம் பலயீனமாக உள்ளதென்ற உண்மையும் உணர்த்தப்படுகிறது.

ஆம், இலங்கையின் வரலாற்றில் மின்சாரம் தடைப்பட்ட கால சூழ்நிலைகளை நாம் ஆராய்ந்து பார்ப்போமாயின், அங்கு அரசியல் சூழ்நிலைகள் மிகவும் பாதகமாக இருந்துள்ளதுடன் அரச கட்டமைப்பும் பலமற்றதாக இருந்திருப்பதைக் கண்டறிய முடியும்.

அதாவது நாட்டில் பலமற்ற ஆட்சித் தலைமை இருந்தபோது நாடு முழுமையிலும் மின்சாரம் தடைப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இவ்வாறு மின்சாரம் தடைப்பட்டமை தொடர்பில் அவ்வப்போது விசாரணைக்குழுக்கள் அமைக்கப்பட்டனவாயினும் அந்த விசாரணைகள் வெறும் கண்துடைப்பாக மட்டுமே இருந்தன

விசாரணைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்தால் மின்சாரம் தடைப்படுகின்ற விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மிகவும் விழிப்பாக இருந்திருப்பர்.

என்ன செய்வது இலங்கையில் அமைக்கப்பட்ட எந்த விசாரணைக்குழுவும் உருப்படியாக எதுவும் செய்யவில்லை.

தவிர, விசாரணைக்குழுக்கள் தங்களின் விசாரணை அறிக்கைகளை உரியவாறு அரசாங்கத்திடம் சமர்ப்பித்தபோதிலும் அவை கிடப்பில் போடப்பட்டன

எதுஎவ்வாறாயினும் நேற்று முன்தினம் நாடு முழுமையிலும் ஏற்பட்ட மின்தடை என்பது விமர்சனத்துக்குரியதொரு சம்பவமாக மாறியுள்ளது.

ஆம், பொருளாதார நெருக்கடிக்குப் பின்பாக இலங்கை மின்சார சபை மிகவும் இறுக்கமாக நின்று மின்கட்டணத்தைக் கண்டபாட்டில் உயர்த்தியது.

இதனால் சாதாரண பொதுமக்களும் சிறிய நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களும் மிகுந்த நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கும்போது, மின்சாரம் தடைப்படாமல் பார்த்துக் கொள்வது மின்சார சபையின் கடமையாகும்.

இருந்தும் இலங்கை மின்சார சபையும் அரசியல் மயமாக்கலுக்குள் அகப்பட்டு விட்டதோ என்று சந்தேகிக்குமளவில் அதன் அசமந்தமான செயற்பாடுகள் அமைந்துள்ளன.

எதுஎவ்வாறாயினும் மின்சாரம் தடைப்படாமல் பார்த்துக் கொள்கின்ற பொறிமுறை இயங்குநிலையில் இருக்கவேண்டும்.

இல்லையேல் மின் தடையின் எதிரொலிப்பு அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது நிதர்சனமாகிவிடும்.

# இலங்கையில் சிறைப்பட்ட மீனவர்களை மீட்க தக்க நடவடிக்கை எடுங்கள்

## அன்புமணி ராமதாஸ் வேண்டுகோள்

(சென்னை)

இலங்கையில் சிறையில் வாடும் அனைத்து மீனவர்களையும் மீட்க வேண்டும் என அன்புமணி ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

"நாகை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து வங்கக்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நாகப்பட்டினம் மற்றும் புதுவை காரைக்கால் மாவட்டங்களைச் சேர்ந்த 25 மீனவர்களை கைது செய்துள்ள இலங்கை கடற்படை அவர்களின் இரு படகுகளையும் பறிமுதல் செய்துள்ளது.

தனுஷ்கோடி அருகே ராமேஸ்வரம் மீனவர்களின் விசைப்படகு மீது தங்களின் படகை மோதி சேதப்படுத்தி உள்ளது இலங்கை கடற்படை.

இத்தாக்குதலில் சேதமடைந்த படகில் இருந்த 5 மீனவர்கள் உயிர் பிழைத்து உள்ளனர். இலங்கை கடற்படையினரின் இத்தகைய செயல்கள் கண்டிக்கத்தக்கவை.

மிச்சாங் புயல் காரணமாக கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாகக் கடலுக்கு செல்லாத மீனவர்கள் கடந்த சில நாட்களாகத் தான் மீன்பிடிக்கச்சென்றுள்ளனர். அதற்குள்ளாகவே அவர்கள் கைது செய்யப் பட்டிருப்பது தமிழக மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வங்கக்கடலில் பாரம்பரியமாகத் தமிழக மீனவர்கள் மீன்பிடித்து வரும் பகுதிகளில் தொடர்ந்தும் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பது சட்டப்பூர்வ உரிமையாக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சு நடத்த வேண்டும். இப்போது கைது செய்யப்பட்ட 25 மீனவர்கள் உட்பட இலங்கை சிறைகளில் வாடும் அனைத்து மீனவர்களையும், இலங்கை அரசிடம் உள்ள அனைத்து இந்திய படகுகளையும் மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-7)

# வற் வரி திருத்தச் சட்டமூலம் இன்று நிறைவேற்றப்படும்

## அமைச்சர் பிரசன்ன நம்பிக்கை

(கொழும்பு)

பெறுமதி சேர்வரி(வற்) திருத்தச்சட்டமூலம் இன்று பாராளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த மற்றும் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருடன் கலந்துரையாடி, குறித்த சட்டமூலத்தை இன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்துக்காக நேற்று பாராளுமன்றம் கூட்டப்பட்டபோதும் கோரம் இன்மையால் சபை நடவடிக்கைகள் இன்று காலை 9.30 வரை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# போகம்பர சிறைச்சாலை ஹோட்டலாக மாற்றப்படும்

(கண்டி)

கண்டி போகம்பர சிறைச்சாலையை ஐந்து நட்சத்திர ஹோட்டலாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்திற்கு உள்ளூர் முதலீட்டாளர் ஒருவர் முன்வந்துள்ளதாகவும் போகம்பர சிறைச்சாலையின் வரலாற்றுப் பெறுமதியைப் பாதிக்காத வகையில் இது மேற்கொள்ளப்படும்.

போகம்பர சிறைச்சாலை வளாகத்தைப் புனரமைப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையும் தொல்பொருள் திணைக்களமும் அனுமதியளித்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

போகம்பரைச் சிறைச்சாலை தற்போது தொல்லியல் திணைக் களத்தின் பராமரிப்பில் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

# நிலையான தொலைபேசி குறுஞ்செய்திகளுக்கும் வரி

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிக் குறுஞ்செய்திகளுக்கு மேலதிகமாக, நிலையான தொலைபேசிகள் மூலம் அனுப்பப்படும் குறுஞ்செய்திகளுக்கும் வரி அறவிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச வருவாயை அதிகரிப்பதற்கான வாய்ப்பாக இந்த வரி அறவிடப்பட உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-7)

### மண்டைதீவு தில்லேஸ்வரம்

# சுப்பிரமணிய சுவாமிகளின் குருபூசை இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலயத்தில் ஜீவ சமாதியாய் வீற்றிருக்கும் குருதேவர் சுப்பிரமணிய சுவாமிகளின் குருபூசை கார்த்திகை மாதத்து விசாக நட்சத்திரமாகிய இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று மகேஸ்வர பூசை இடம் பெறும். (ந-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** ஜம்புகோளப்பட்டினம் ஓய்வு விடுதி-மாதகல், சில்லாலை, முதியோர் இல்லம், மாதகல் அந்தோனியர் கோவிலடி, அரசடி வடலியடைப்பு, இடும்பன், ஜம்புகோளப்பட்டினம், காஞ்சிபுரம், மாதகல், காட்டுப்புலம், குசுமாந்துறை மாதகல், மாதகல் இறங்கு துறை, பண்டத்தரிப்பு, சாந்தை, சில்லாலை, சித்தங்கேணி, வைரவர் கோவிலடி சுழிபுரம், வேலுப்பிள்ளை கடையடி, திருமண பண்டபம்-பிரான்பற்று பாரதி வீதி-கம்பர்மலை, பழைய காவல் நிலையம்-வல்வெட்டித்துறை, வல்வெட்டித்துறை சிவன் கோவில் வீதி, வல்வெட்டித்துறை-வன்னிச்சி, வல்வெட்டித்துறை வீதி, கல்லறைக்கு அருகில்-உடுப்பிட்டி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** குடாகச்சக்கொடிய ஆகிய இடத்திலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

10



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

தேசிய செயற்றிட்டத்தை அமுல் படுத்தும் செயற்பாட்டின் ஒரு கட்டமாக, தேசிய செயற்றிட்டத்துடன் வெளியிடப்பட்ட நேர்மைக் கையேட்டின் அடிப்படையில் ஒவ்வொரு அரச நிறுவனங்களுக்கும் நேர்மையான உத்தியோகத்தர் ஒருவரை இவ்வூழல் எதிர்ப்பு தினத்தில் நியமிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இதற்கமைய நாடளாவிய ரீதியில் உள்ள 60 பிரதேச செயலகங்களில் ஒரு காரியாலயத்திற்கு ஒரு நிறைவேற்று உத்தியோகத்தருக்கு நேர்மையான உத்தியோகத்தராக நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

**துப்பறிதலும் சுற்றிவளைப்பும் -2023**

1. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ் பத்திரகே, அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக நபர் ஒருவரிடம் இருந்து 10 மில்லியன் ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் 2023.11.10 கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் கொழும்பில் ஒரு இடத்தில் பணத்தை பெற்றுக் கொண்டிருந்த போது, ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுற்றாடல் அதிகாரசபை தொடர்பான போலி ஆவணம் ஒன்றின் மூலம் நபர் ஒருவருக்கு வசதி செய்து கொடுப்பதற்காக சந்தேகநபர் இந்தத் தொகையை கோரியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வர்த்தகர் முதலில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிடம் இந்த விடயத்தை தெரிவித்ததாகவும் அவர் வர்த்தகரை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அனுப்பியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து CEA தலைவர், முன்னாள் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் மற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டனர்.

2. இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகள் 25.08.2023 ஆம் திகதி பதவிய பிரதேச செயலகத்தின் குடியேற்ற அதிகாரியை கைது செய்தனர். பதவிய, ஸ்ரீபுர பகுதியை சேர்ந்த முறைப்பாட்டாளருக்கு சொந்தமான சுவர்ண பூமி பத்திரத்தை முறைப்பாட்டாளரின் உறவினருக்கு மாற்றிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பதற்கு 25000.00 ரூபாயை இலஞ்சமாக பெறுகையில் குடியேற்ற அதிகாரியின் காரியாலயத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

3. தம்பதெனிய பிரதேசத்தை சேர்ந்த நபரொருவரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கமைய, இலஞ்சமாக பணத்தைப் பெற்ற குற்றச்சாட்டின் பெயரில் மருதானை பொலிஸ் நிலைய சூழல் பிரிவின் பொறுப்பதிகாரி (உதவி ஆய்வாளர்) 2023.07.20ஆம் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

முறைப்பாட்டாளர் குளியாபிட்டி மாவட்ட நீதிமன்றத்தில் வாகன விபத்தொன்று சம்பந்தமாக தொடுத்திருந்த இழப்பீட்டு வழக்கிற்கு சாட்சி அளிப்பதற்காக பெற்றுக் கொள்ள முடியுமான பிரயாண செலவுத் தொகையான 2000.00 ரூபாவிற்கு மேலதிகமாக, முறைப்பாட்டாளருக்கு சாதகமாக சாட்சி அளிப்பதாக கூறி 10,000.00 (பத்தாயிரம்) ரூபாவை இலஞ்சமாகக் கோரி பெற முற்படுகையில் குளியாபிட்டி மாவட்ட நீதிமன்றத்தின் அருகே கைது செய்யப்பட்டார்.

4.பொத்துவில் இலங்கை போக்குவரத்து சபை காரியாலயத்தில் கடமையாற்றும் நடத்துநர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் அகில இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக கடமையாற்றி வந்த (சிரேஷ்ட டெப்போ பரிசோதகர்) ஒருவர் இலஞ்சம் பெற்றுக் கொண்டமை தொடர்பில் 2023.06.12ஆம் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டாளர் அகில இலங்கை, மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் கிழக்கு மாகாண பிரதிநிதியாக கடமையாற்றுவதற்காக தனது நடத்துநர் கடமைகளில் இருந்து முழுநேரமாக விடுவிக்கப்பட்டிருந்தார். அவர், தனது சம்பளத்தை பெற்றுக் கொள்வதற்காக மாதாந்த கடமைகளை முறையாக நிறைவேற்றியுள்ளார் என்பதை சான்றுப்படுத்துவதற்காக சங்கத்தின் பொதுச் செயலாளரின் சிபாரிசு கடிதத்தை கோரியுள்ளார்.

குறித்த கடிதத்தை வழங்குவதற்கும் அவரது சம்பளத்தை முறையாகப் பெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் பொதுச் செயலாளர் அவரிடமிருந்து ரூ.10,000/- லஞ்சம் கோரியுள்ளார். அதன் அடிப்படையில் குறித்த பொதுச் செயலாளர் புறக்கோட்டை மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் குறித்த இலஞ்சத்தை பெற்றுக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டார்.

5. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய சுகஸ்கந்த பொலிஸ் நிலையத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் நிலைய பரிசோதகர் ஒருவரை 100,000 ரூபாவை இலஞ்சமாக கோரிப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரிகள் 02.06.2023 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

முறைப்பாட்டாளரான ஆரோக்கிய பியூட்டி ஹெர்பல் ஃபூட் ஸ்பா நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரிடமிருந்து 100,000/- ரூபாவினை இலஞ்சம் ஆக கோரிப் பெற்றுக்கொண்டபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த இலஞ்சமானது எந்தவொரு தலையீடும் இல்லாமல் ஸ்பா நிறுவனம் அதன் வணிகங்களை மேற்கொள்ள அனுமதிப்பதற்காகவும் எதிர்காலத்தில் ஸ்பாவுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படுவதைத் தடுப்பதற்காகவும் பெறப்பட்டது..

குறித்த விடயம் கடவத்த பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ஒருவர் ஊடாக மேற்கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டிருந்தது சந்தேக நபர் ராகம - கடவத்த வீதி, ஸ்ரீலங்கா டெலிகொம் முன்பாக வைத்து இலஞ்சம் பெற்ற போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

6. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பொரளை தெற்கு கிராம சேவகர் பிரிவின் கிராம உத்தியோகத்தரை ரூ.50,000/- ரூபாவை இலஞ்சமாக கோரிப் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் 23.03.2023ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

பொரளை தெற்கு கிராம சேவகர் பிரிவின் வாக்காளர் பட்டியலில் முறைப்பாட்டாளரின் மற்றும் அவரது மனைவியின் பெயர்களை உள்ளடக்குவதற்காக 50,000/- ரூபாவினை இலஞ்சமாக கோரிப் பெற்றுக் கொண்ட போதே சந்தேக நபர் அவரது அலுவலகத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

7. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய நுவரெலியாவில் வசிக்கும் தரகர் ஒருவரை 5000/- ரூபாவை இலஞ்சமாக கோரிப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள் 20.03.2023 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

வங்கியில் வீட்டுக் கடன் பெறுவதற்குத் தேவையான அடமானப் பத்திரத்தையும் மற்றும் உரிமையாளரின் சொத்துக்களை வங்கியில் அடமானம் வைக்கக் கூடிய நுவரெலியா மாவட்ட காணி பதிவாளர் அலுவலகத்தினால் சான்றுப்படுத்தப்பட்ட ஆவணத்தையும் பெற்றுக் கொடுப்பதற்காக சந்தேகநபர் ரூ10,000 கோரியுள்ளார். இதற்காக முதலில் ரூ 5,000 பெற்றுள்ளார். எஞ்சிய 5,000/- ரூபாவை பெற்றுக் கொண்ட போதே சந்தேக நபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

8. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் கல்முனை பேருந்து நிலையத்தில் கடமையாற்றும் நிலைய பொறுப்பதிகாரியை 200/-ரூ இலஞ்சம் கோரிப் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரிகள் 08.03.2023 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

கல்முனை தனியார் பேருந்து நிலையத்தில் இருந்து திருகோணமலை நோக்கி பயணிக்கும் EP NB-4625 எனும் இலக்கப் பேருந்தின் பயண அட்டவணையைச் சுமூகமாக மேற்கொள்வதற்காக குறித்த சந்தேகநபர் தினமும் 200/- ரூபாவை இலஞ்சமாக கோரிப் பெற்று வந்துள்ளார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடைப்பட்ட...

மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதாக கூறியதுடன், மின்சாரத்திற்காக அதிக பணம் செலவழிக்கும் நாட்டில் பாதுகாப்பின்மைக்கு காரணம் என்ன என்பதை கண்டறிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

எதிர்க்கட்சி தலைவருக்கு பதில் அளித்த இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த,

"எதிர்க்கட்சித் தலைவர் கோரும் விசாரணைகளை எம்மால் முன்னெடுக்க முடியாது. இலங்கை மின்சார சபை மற்றும் மின்சக்தி அமைச்சு இணைந்து மின்சார கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

மின்சார விநியோகப் பாதையில் ஏற்பட்ட கோளாறே மின் தடை ஏற்பட்டமைக்கு காரணம். நுரைச்சோலை மின் நிலையத்திலும் இதனால் பாதிப்பு ஏற்பட்டது" என்றார். இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல,

"2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் திகதியும் இவ்வாறு நாடளாவிய ரீதியில் மின்சாரம் தடைப்பட்டது. அதே மாதம் 7ஆம் திகதியும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டது. இதனால் 6 மணித்தியாலங்கள் நாடு முழுவதும் மின்சாரத் துண்டிப்பு ஏற்பட்டது.

மின்சக்தி அமைச்சு உரிய காலத்தில் குறித்த பணிகளை செய்ய முடியாததன் காரணமாகவே இவ்வாறு மின் துண்டிப்பு ஏற்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்தது" என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமால் லன்சா, இயற்கையால் ஏற்பட்ட கோளாறுகளையும் அரசாங்கத்தின் மீது சுமத்துகின்றனர். கீழ்த்தரமான அரசியலை செய்ய வேண்டாமென எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு கோரிக்கை விடுத்தார். (ந-7)

## வற் வரி...

நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர்,

2020ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருமானம் வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தின் சீரற்ற பொருளாதார முகாமைத்துவத்தால் நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது.

மொத்த உள்நாட்டு தேசிய உற்பத்தி 12% இலிருந்து 8% ஆகக் குறைந்த காரணத்தாலும், சர்வதேச மூலதனச் சந்தைகளில் கடன் பெறும் வாய்ப்பை இலங்கை இழந்தது.

செயல்திறனற்ற மூலதன முகாமைத்துவத்தால் உருவாக்கிக் கொண்ட வரிக் கொள்கை ஊடாக இந்நாட்டில் இருந்து மூளைசாலிகள் வெளியேறியுள்ளனர்.

விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணினிப் பொறியியலாளர்கள் என பல்வேறு தரப்பினர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

நியாயமான வெளிப்படைத் தன்மையான கருத்துக்களை அடிப்படையாக கொண்ட வரிச் சூத்திர முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

இலங்கையின் "பரேட்" சட்டத்தின் ஊடாக சிறுதொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஊழல் புரிவோருக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பரேட் சட்டத்தினால் இலங்கையில் வங்கிகள் நன்மை அடைந்தாலும், நுண், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மையாளர்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவை.

வரலாற்றில் முதல் தடவையாக நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படுவதற்கு வரிச்சலுகை வழங்கியமையே காரணம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார். (ந-7)

## ஜனாதிபதி...

பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல் நடக்கும் என்று சொல்வது ஜனாதிபதிக்கு ஒரு வருத்தமாக இருக்கிறது. அவர் இவ்வாறு கூறி தனது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ளப் பார்க்கின்றார்.

ஆனால், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். அதை நடத்தினால்தான் ஜனாதிபதி ஏனைய தேர்தல்களைப் பற்றி சிந்திக்க முடியும்.

அவர் தேர்தலை நடத்த அச்சப்படும் நிலைமையே காணப்படுகிறது. தேர்தல் என்றாலே விசர் நாய் தண்ணீரை கண்டதுபோல் பயப்படுகின்றார். ஆகவே, அவர் தேர்தலை நடத்தவே மாட்டார்.

இலங்கையில் தற்போதைக்கு வேறு தேர்தல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை. ஏதேனும் அதிசயங்கள் அல்லது அழுத்தங்கள் இடம்பெற்றால் மாத்திரமே தேர்தல் நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## திருமலையில்...

கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள நிலையில் அக்கட்சியின் மூலக்கிளைகள் மற்றும் தொகுதி, மாவட்டக் கிளைகளின் புனரமைப்பு பணிகள் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் மூலக் கிளைப் புனரமைப்பின்போது, இலங்கைத் தமிழரசுக் கட்சியில் நீண்ட காலமாகச் செயற்படும் அங்கத்தவர்கள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று அதிருப்தி வெளியிட்டிருந்தனர். இதையடுத்து, அவர்கள் தாம் தொடர்ச்சியாக ஆதரவளித்து வருகின்ற இரா. சம்பந்தரிடம் குறித்த விடயத்தைக் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

அது தொடர்பில் கரிசனை செலுத்திய இரா. சம்பந்தன், குறித்த மூலக்கிளைகளின் புனரமைப்பின்போது அங்கத்தவர்கள் தெரிவில் தாம் திருப்தி அடையவில்லை என்றும், அந்தத் தெரிவுகள் இதய சுத்தியுடன் நடைபெறாது தன்னை ஆதரிக்கும் கட்சியின் உறுப்பினர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் விசனத்தை வெளியிட்டுள்ளார். அது மட்டுமன்றி குறித்த விடயம் சம்பந்தமாக கட்சியின் ஒழுக்காற்றுக்குழு விசாரணைகளை நடத்தி உரிய தெளிவுபடுத்தல்களைச் செய்ய வேண்டும் என்றும் தெரிவுகள் இடம்பெற்றிருப்பது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீள் தெரிவு முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளார். (ந-7)

## இந்திய உயர்ஸ்...

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை - இந்திய நட்புறவை மேம்படுத்த இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இதேவேளை இந்திய உயர்ஸ்தானிகர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு ஒருபோதும் மாற்றமடையாது என கூறியமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


லக்கி 7 VIP
திகதி 2023.12.10
சீட்டிழுப்பு இலக்கம் 0150
E 3 1 8 6 8 6 E
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.12.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1354
E 22 46 49 74 E
Double Chance 22571

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3566
சீட்டிழுப்பு திகதி 10.12.2023
K 20 26 39 80
K 65485
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.10
சீட்டிழுப்பு இலக்கம் 0633
ரிஷபம் 02 05 42 50 ரிஷபம்
01972 26

மஹஜன சம்பத
திகதி 2023/12/10
சீட்டிழுப்பு இலக்கம் 5324
J 3 1 1 1 4 5
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1672
E 02 06 53 56 72
Double Chance 47430

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 10.12.2023 வெற்றி வாரம் 032
X 4 1 3 5 2 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,527,815.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2298 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.10 தினம் ஞாயிற்றுக்கிழமை
38 46 62 69 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,697,044/-

சனிதா Shanida
திகதி 2023.12.10 வெற்றி வாரம் 4459
07 47 56 67 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 66,419,184.00

சசிரி SASIRI
413 2023.12.10 கபிலம்
03 11 19
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,291,960/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4010 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.12.10 தினம் ஞாயிற்றுக்கிழமை
19 26 41 44 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,727,752/-

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 07 02 32 38 71
1474 மஞ்சள் 2023.12.10 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 475,676,004.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47

ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2124
வர்ணம்: இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2023.12.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,102,728/-
15 34 43 76 O


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-7869)

வயது 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வயது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

## CANADA VISITOR VISA
VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7869)
0777-068-777
49A சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
## ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18185)
076 825 7716 (ஆகாஸ்)


## வவு...


மதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நெளுக்குளத்தில் இருந்து வவுனியா நகரை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், நகரில் இருந்து நெளுக்குளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் வேப்பங்குளம் பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7)


## காணி விற்பனைக்கு
கோண்டாவில் நந்தாவில்
அம்மன் கோவிலுக்கு
அருகில் 3 3/4 பரப்புக்
காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : (18186)
077 882 8638

## ஊர் கோழிக் குஞ்சுகள்



(18189)
ஒரு நாள் ஊர்க்கோழி குஞ்சுகளை
தினமும் பெற்றுக்கொள்ளலாம்.
077 332 2433

## வேலை வாய்ப்பு
யாழ். நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு தகைமை
அல்லது விருப்பம் உடையவர்கள் தேவை.
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்

ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள் (C-7864)
077 214 1214

## மணமகள் தேவை
1981 இல் பிறந்த கார்த்திகை நட்சத்திரம்(4ம் பாதம்)
உடைய லண்டனில் குடியுரிமை பெற்ற விவாகரத்து
பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
கல்வித் தகைமை Jaffna BSC, London MSC
தொடர்பு: (18160)
077 110 7624

## காணி விற்பனைக்கு
GOLDEN Real Estate

கைதடிச் சந்திக்கு அருகாமையில் 24 பரப்பு
(நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.
- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை


(18183)
077 468 3354,
076 755 8606

## காணி விற்பனைக்கு
முல்லைத்தீவு
உண்ணாப்பிலவில்
6.5 பரப்பு உறுதிக்காணி
விற்பனைக்கு
(பிரித்தும் கொடுக்கப்படும்.)
077 089 1992

## Canada and Italy Visa
(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்பம் ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
மணியாவர் தேவை
VISA CONSULTANT
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. (18168)
077 038 5584


## துயர் பகிர்வு அறிவித்தல்

தோற்றம்
28 - 01 - 1940



மறைவு
09 - 12 - 2023

### கந்தையா சதாசிவம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சதாசிவம் அவர்கள் 09.12.2023 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பராசக்தியின் ஆருயிர்க் கணவரும் சுபாஸ்கரன்(ஆசிரியர்-புனித ஹென்றி அரசர் கல்லூரி, இளவாலை), சுதாயினி(கனடா), செல்வாஜினி(அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), சுமாலினி(லண்டன்), முரளிகரன்(ஐங்கரன் ஸ்டோர்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாளினி(அபிவிருத்தி உத்தியோகத்தர் வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்), பகிரதன்(கனடா), ராஜ்குமார்(Mahaan Enterprises), திருமுருகன்(லண்டன்), மயூரி ஆகியோரின் அன்பு மாமனாரும் மானசன், அஸ்விதா, இலக்கியா, நந்திகா, குந்தவி, கீதநிலவன், கீதகி, தாமீரன், தருணிகா, சகீசன், சஸ்விகா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, துரைராசா, முத்துப்பிள்ளை, இராசா, தம்பித்துரை, ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் சரோஜினிதேவி, இந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 13.12.2023 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(18184)

பாப்பாதோட்ட வீதி,
இணுவில் மேற்கு, இணுவில். 077 994 4439

தகவல்:
குடும்பத்தினர்


யாழ் மண்ணில்!
## புதுப்பொலிவுடன் ஆரம்பம்
க.பொ.த உயர்தர வர்த்தகப்பிரிவு
2024, 2025 ஆம் ஆண்டுகளுக்கான
வகுப்புகள் ஆரம்பம்

ஆசிரியர் குழாம்



P.தயாபரன்
B.COM (ACC.SPL). PGDE
பொருளியல்



N.B.கஜென்
B.Com (Hons) M.M.Spl, Dip.in.Edu.
வணிகக்கல்வி



E.ரமணன்
BBA(Specilization in Accounting), MBA(UOJ)
கணக்கீடு

அனுமதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0776284845 | EP Academy Every Little Success
(C-7863)
354, 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org